25th September 1958]

Sri K. G. PALANISWAMY GOUNDER : கிராமங்களுக்குச் சென்று அங்கே பணியாற்றுவதற்கு டாக்டர்கள் முன்வருவதில்லை என்று தெரிகிறது. எனவே, மாணவர்களை வைத்தியக் கல்லூரியில் சேர்த்துக்கொள்ளும்போதே, படிப்பு முடிந்தவுடன் அவர்கள் இரண்டு வருஷங்களாவது கிராமங்களில் பணியாற்றிய பிறகுதான் நகரத்திற்கு வரவேண்டும் என்ற நிபந்தனைக்கு அவர்களை உட்படுத்துவதற்கு சர்க்கார் முன் வருமா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : இதற்கு ஏற்கனவே பதில் சொன்னேன். இப்போதுள்ள சட்டப்படி, அவர்களை இந்த மாதிரியான நிர்ப்பந்தத்திற்கு உட்படுத்தமுடியாது.

Nannilam–Nachiarkoil Road

* 523 *Q.*—Sri M. C. MUTHUKUMARASWAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Nannilam–Nachiarkoil Road in Tanjore district, Nannilam taluk, has been metalled in full ;

(*b*) what is the total length of the road;

(*c*) what is the amount set apart for the work;

(*d*) whether the above road is maintained by the Highways Department or by the Public Works Department; and

(*e*) the length of the road maintained by each department?

The Hon. Sri P. KAKKAN : (*a*) to (*e*) The road is known as the Nagore-Nannilam-Nachiarkoil Road and is 29 miles, one furlong, 275 feet long. The first 27 miles have been metalled and it is under the control of the Highways Department. As regards the remaining length, viz., two miles, one furlong, 275 feet which is on an irrigation river bank and is under the control of the Public Works Department, the metalling at a cost of Rs. 1 lakh has been sanctioned and this bit of road will be taken over from the Public Works Department by the Highways Department for metalling and future maintenance.

Sri M. C. MUTHUKUMARASWAMY : இந்த ரோடுக்குக் கப்பி போட ஆரம்பித்து ஏறக்குறைய 16 வருஷங்கள் ஆகின்றன. இந்தக் காலதாமதத்தைப் பார்க்கும்போது, இந்த வேலை கோவிலுக்கு கோபுரம் கட்டும் திட்டம்போல இருக்கிறது என்று சொல்லத் தோன்றுகிறது. இது சம்பந்தமாக, அந்தப் பகுதியில் சுற்றுப் பிரயாணம் செய்த அமைச்சர்களில் ஒவ்வொருவருக்கும் மனு கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த ரோடின் மீது இரண்டு இலாகாக்கள் அதிகாரம் செலுத்தி வருகின்றன. காலதாமதத்திற்கான குற்றத்தை இரு இலாக்காக்களும் ஒன்றின் மீது ஒன்று சாட்டிக்கொண்டு திட்டத்தை காலம் கடத்தி வருகின்றன.

Mr. SPEAKER : கேள்வி நேரத்தில் கேள்வி போட வேண்டும். ஏன் அந்த ரோடு இன்னும் போடப்படவில்லை என்று உங்களுக்குத் தெரிந்திருக்கும்போது, அந்தக் காரணத்தைக் கேட்பதற்கு ஏன் நீங்கள் கேள்வி போடுகிறீர்கள் ? இந்த நேரத்தில் கேள்வி போட வேண்டும். இப்போது நீங்கள் செய்வது போன்ற பிரசங்கங்களை பட்ஜெட் விவாதத்தின்போது செய்யுங்கள்.

Sri M. C. MUTHUKUMARASWAMY : இந்த ரோடிற்குக் கப்பி போட ஆரம்பித்து 16 வருஷங்கள் ஆகின்றன. அங்கே ரோடு போடும் வேலையை இன்னும் தாமதிக்காமல் குறுகிய காலத்தில் செய்துமுடிக்க அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுக்குமா ?

[25th September 1958

THE HON. SRI P. KAKKAN: அந்த ரோடில் "மெடல்" செய்யப் படாத பகுதியான 2 மைல் 1 பர்லாங் 275 அடி நீளமுள்ள பகுதி இப்போது பொது மராமத்து இலாகாவிடம் இருக்கிறது. அது "மெடல்" செய்யப்பட்டு பராமரிக்கப்படுவதற்காக அந்த இலாகாவிடமிருந்து ஹை வேய்ஸ் இலாகாவால் எடுத்துக் கொள்ளப்படுவதற்கு ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. அது ஒரு லட்ச ரூபாய் செலவில் "மெடல்" செய்யப் படும்.

SRI K. K. MUTHIAH: பி. டப்ள்யூ. டி. யிடம் இருக்கிற ரோடுகளை எல்லாம் ஹைவேஸ் டிபார்ட்மெண்ட் நிர்வாகத்திற்கு கொண்டுவர முடியாததால்தான் தாமதம் எல்லாம் ஏற்படுகிறது. ஆகவே, பி. டப்ளியூ. டிபார்ட்மெண்டில் இருக்கிற எல்லா ரோடுகளையும் ஹைவேஸுக்கு மாற்ற மாகாணம் பூராவிற்கும் உத்தரவிட அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதா ?

THE HON. SRI P. KAKKAN: எல்லாவற்றையும் செய்துவிடமுடி யாது. நதிகளின் கரை வழி போகிற ரோடுகளை எடுத்துக் கொள்ள முடியாது. எடுத்துக்கொண்டால் கரைகள் உடைந்து சேதம் ஏற்படும். எவற்றை எடுத்துக்கொள்ள முடியுமோ அவைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

Ottery Nullah

* 524 *Q.*—SRI S. PAKKIRISAMI PILLAI: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the amount set apart for the improvement of the Otteri Nullah in the City of Madras;

(*b*) the name of the agency which has taken up this work for execution; and

(*c*) the period within which this work would be completed?

THE HON. SRI P. KAKKAN: (*a*) A sum of Rs. 70,000 has been sanctioned by Government in May 1958 towards the construction of a concrete revetment to the Otteri Nullah with a small parapet wall over the revetment.

(*b*) Tenders have not yet been called for the above work. Detailed estimates for the works are under preparation in the Executive Engineer's office. The Executive Engineer has promised to submit the detailed estimates to the Superintending Engineer, Madras Circle for technical sanction by the middle of this month (September 1958). The name of the contractor can be reported only when a decision is taken on the tenders.

(*c*) The work will be completed within six months from the date of acceptance of the tender.

SRI K. VINAYAKAM: இந்த ஒட்டேரி நுல்லா சென்னையில் உற் பத்தியாகிற எல்லா நோய்களுக்கும் பிறப்பிடமாக இருப்பதால், இதில் என்ன இம்புரூவ்மெண்ட் செய்தாலும் அங்குள்ள தண்ணீர் அசுத்தத் தைப் போக்க முடியாத காரணத்தினால் ஒட்டேரி நுல்லா முழுவதையும் மூடிவிட்டு ஏழை மக்களுக்கு வீடு கட்டிக் கொள்ள அந்த இடத்தை ஜாரி செய்து தர அரசாங்கம் முன்வருமா ?

MR. SPEAKER: The hon. Member may put a separate question.